**மார்ச் - 7**

**"நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால், தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்". - 1யோவா 4 : 12**

நான் தேவனுடைய மதிப்பிடுதலில் ஒரு பொருட்டொன்றொ அல்லது ஒன்றுமில்லை என்பதையோ என்னுடைய அறிவு அல்லது கீர்த்தி அல்லது பிரசங்கக்கலை ஆகிய இவைகளால் அளக்கப்படுவதைப் பார்க்கிலும், நான் தேவனுக்கும், அவருடைய சகோதரர்களுக்கும், அவருடைய விவகாரத்துக்கும், பொதுவாக உலகுக்கும், என்னுடைய விரோதிகளுக்கும் கூட நான் காட்டும் என்னுடைய அன்பினால் அளக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. ஆகையால், குணத்தை அளவிடுவதில் முதலாவது அன்பை வைத்து, கர்த்தருக்கு சமீபமாயிருக்கிறோம் என்பதற்கும் அவரால் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறோமோ என்பதற்கும் உரிய முக்கிய பரீட்சையாக அதைக் கருத வேண்டியவர்களாக இருக்கிறோம். பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறவர்கள் எவர்களோ, அவர்கள் நல்ல குணசாலிகளாக இருக்க வேண்டும். ஜீவியத்தின் அன்றாட காரியங்களில் அன்பின் ஆவியைக் காண்பிப்பதைவிட, வேறு எந்த வழியிலும் நாம் நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை நன்றாக அறிவிக்க முடியாது. **- Z ’03, 56, 57 (R 3150).**

தேவன் அன்பாகவே இருக்கிறார் என்றும் ஆள்த்தன்மையில்லாமல், அவருடைய குணங்களாகிய அவருடைய ஆவியைக்கொண்டு தமது ஜனங்களிடத்தில் வாசம் செய்கிறார் என்றும் வேதாகமம் சொல்லுகிறது. அதன் பலனாக யார் அன்பின் இந்தக் குணத்தைக் காண்பிக்கிறானோ, அவன் தேவனால் இருப்பிடமாகக் கொள்ளப்பட்டிருக்கிறான். யார் தொடர்ந்து இந்த அன்பின் குணத்தை ஜீவியத்தின் வெவ்வேறு அனுபவங்களின் மத்தியில் வெளிப்படுத்திக் காண்பிக்கிறானோ அவன் தெய்வீக அன்பு தன்னில் பூரணப்பட்டிருப்பதைப் பார்க்கும் சந்தோஷத்தை உடையவனாக இருப்பான். **– P ’35, 31.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோவா 3:16; 6:54-56; 13:34; 14:21-23; 15:7-12; 17:21; 1கொரி 3:16; 6:19; 2கொரி 6:16; 1யோவா 3:16-18, 22-24; 4:7,13,15-19; ரோம 8:8-17; கலா 4:5,6.

**கோபுர வாசிப்பு : Z ’11, 205 (R 4849).**

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வார அனுபவம் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதில் உதவியாயிருந்தது அல்லது இடையூறாயிருந்தது என்ன? அவை எதில் முடிந்தன?